இடத்திலே வைத்து சிகிச்சை அளிக்க முன்வருமா? தாங்களே முன் வந்து இந்த நோயைத் தீர்ப்பதற்கு மருத்துவர்கள் கேட்டால் அவர்களுக்கு வாய்ப்பு அளிக்க அரசு முன்வருமா என்று கேட்டுக் கொள்வதோடு, இந்த வியாதிக்கு சித்தமருத்துவத்திலே நல்ல மருந்துகள் இருப்பதாகச் சொல்லப்படுகிறதே அதுகுறித்து ஆய்வு செய்யப்பட்டதா ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : சித்த மருத்துவத் திலே அந்த வியாதிக்கு மருந்துகள் இருப்பதாக நமக்கு இதுவரை தகவல் வரவில்லை. ஆனால் மாண்புமிகு உறுப்பினர் அவர் களுக்கு இன்னொரு தகவலையும் நான் சொல்ல விரும்புகிறேன். இதை நாம் கண்டுபிடித்ததே—ஏற்கனவே நம்முடைய மாநிலத் திலே இரண்டு மாவட்டங்களிலே டென்மார்க் நாட்டின் உதவி யோடு நடத்தப்பட்டு வரும் டேனிடா திட்டம் என்ற அந்தத் திட்டத்தை நாம் நடத்திக்கொண்டு வருகிறோம். அந்தத் திட்டத்தின்கீழ் அவர்கள் கொடுத்திருக்கின்ற பல்வேறு உபகர ணங்களின் மூலமாக ' இன்புட்ஸ்'' என்று ஆங்கிலத்தில் சொல் கிறோமே, அவைகளின் மூலமாக இவைகள் கண்டுபிடிக்கப்பட்டி ருக்கின்றன. இப்பொழுது இந்த நிலைமை கட்டுக்கடங்கி, நல்ல நிலைமையில் சமாளித்திருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் கள் இன்னொரு தகவலையும் சொல்லியிருக்கிறார்கள். பிறந்த குழந்தைகளுக்குகூட இந்த நோய் இருக்கிறது என்று சொல்லி யிருக்கிறார்கள். அது நியாயமான கேள்விதான். Syphilis என்ற வியாதி பிறக்கும் குழந்தைகளுக்குக்கூட வரும் நிலைமை இருக்கிறது. ஆகவே, அந்தக் குழந்தைகளைப் பரிசோதித்து நட வடிக்கை எடுப்பதற்குத் தயாராக இருக்கிறோம். தேவைப் பட்டால் சமூக நல இலாக்காவின் மூலம் என்ன செய்யலாம் என்ற திட்டத்தைக் கொண்டு வருவதற்கும் தயாராக இருக் கிறோம்; ஏற்பாடு செய்யத் தயாராக இருக்கிறோம் என்பதை மாண்புமிகு உறுப்பினர்களுக்குச் சொன்னால் அவர்களுக்கு அது ஆறுதலாக இருக்கும் என்று நான் நினைக்கிறேன்.

3. அறிக்கைகள் அளித்தல்.

(அ) பொது நிறுவனங்கள் குழு.

டாக்டர் கே. பி. இராமலிங்கம் : மாண்புமிகு பேரவையின் துணைத் தலைவரவர்களே, நான் பொது நிறுவனங்கள் குழுவின் கீழ்க்கண்ட அறிக்கைகளை பொது நிறுவனங்கள் குழுவின் தலைவரின் சார்பாக அளிக்கிறேன்:

(அ) தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழகத்தின் செயல் முறை குறித்த பொது நிறுவனங்கள் குழுவின் இருபத்தேழாவது அறிக்கை.

(ஆ) பொது நிறுவனங்களின் செயலாக்கம் குறித்த பொது நிறுவனங்கள் குழுவின் இருபத்தெட்டாவது அறிக்கை.

(ஆ) அரசு உறுதிமொழிக் குழு.

திரு. சு. பாலன் : மாண்புமிகு பேரவையின் துணைத் தலைவர் அவர்களே, நான் அரசு உறுதிமொழிக் குழுவின் கீழ்க்கண்ட அறிக்கையை அளிக்கிறேன் :

அரசு உறுதிமொழிக் குழுவின் இரண்டாவது (எட்டாவது சட்டமன்றப் பேரவை) அறிக்கை.

4, வரவு-செலவுத் திட்டம், 1986—87வாக்கெடுப்பு—(தொடர்ச்சி)

கோரிக்கை எண். 30—சமூக நலன்.

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

"மானியக் கோரிக்கை எண். 30—சமூக நலன் என்ற தலைப்பின்கீழ் ரூ. 76,04,25,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்."

டாக்டர் க. நல்லமுத்து : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பெரம்பலூர் தொகுதி, வேப்பந்தட்டை ஒன்றியம், காரியனூர் ஊராட்சி மன்றத்தைச் சேர்ந்த வெள்ளுவாடி கிராமத்தில் குழந்தைகள் நல காப்பகம் (பால்வாடி) அமைக்கப்பட வேண்டியதன் அவசியம் குறித்து விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

"மானியக் கோரிக்கை எண். 30—சமூக நலன் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 76,04,25,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கொள்கை பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்: